# தமிழ்நாடு பள்ளிக் கல்விஆணையரின் செயல்முறைகள்,
# சென்னை-6

**ந.க.எண். 50403 / பிடி2/இ1/ 2021,** **நாள்.07.10.2021**

**பொருள்:** பள்ளிக் கல்வி ஆணையரகம் - உயர் தொழில்நுட்ப ஆய்வாக வழி மாநில அளவிலான மதிப்பீடு- 9முதல்12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு நடத்துதல்- தொடர்பாக.

**பார்வை:** மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் ந.க.எண். 4244/ஈ1/2020, நாள். 06.10.2021

••••••

Covid-19 காரணமாக பெருந்தொற்று மாநில அளவில் பரவியுள்ள நிலையில் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள கற்றல் இடைவெளியை குறைத்தல் சார்ந்து, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலம் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 9 முதல் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களின் கற்றலை மேம்படுத்தவும் புத்தாக்கப் பயிற்சி கட்டகம் தயாரிக்கப்பட்டு பள்ளியில் நடைமுறையில் உள்ளது.

முதல் கட்டமாக புத்தாக்கப் பயிற்சிக் கட்டகத்தில் 9 மற்றும் 10ஆம் வகுப்புகளுக்கு தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் ஆகிய பாடங்களுக்கும். 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கு தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், உயிரி தாவரவியல், விலங்கியல், உயிரி விலங்கியல், வரலாறு, பொருளியல், கணக்குப்பதிவியல், வணிகவியல், கணினி அறிவியல் மற்றும் கணினி பயன்பாடுகள் ஆகிய பாடங்களுக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் பாட வாரியாக 60 கொள்குறி மதிப்பீட்டு வினாக்கள் தயார் செய்யப்பட்டுள்ளது.

இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி 9 முதல் 12-ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு உயர்தொழில் நுட்ப ஆய்வகம் (HighTech Lab) மூலம் மதிப்பீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி அனைத்து தலைமை ஆசிரியர்களும் இந்த மதிப்பீட்டை 12.10.2021 அன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணிக்குள் உயர்தொழில் நுட்ப ஆய்வகத்திலுள்ள (Hitech lab) கணினிகளின் எண்ணிக்கைக்கேற்ப ஒவ்வொரு குழுவினருக்கும் மாணவர் EMIS LOG IN மற்றும் PASSWORD ஆகியவற்றை பயன்படுத்தி ஒரு மணி நேரம் கால அவகாசம் அளித்து நடத்திட வேண்டும். மேலும், இச்செயல்பாட்டினை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் கண்காணித்திட அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் ஒவ்வொரு குழு மாணவர்களுக்கான மதிப்பீடு முடிந்த பின்னர் உடனுக்குடன் அடுத்தடுத்த குழு மாணவர்களை அமரவைத்து அனைத்து மாணவர்களும் இணைப்பிலுள்ள அட்டவணையின்படி அனைத்து அரசு பள்ளி தலைமை ஆசிரியர்களும் செயல்படவும், ஆசிரியர்கள் இணையதள வசதி உள்ள கணினிகளைப் பயன்படுத்தியும் இம்மதிப்பீட்டுச் செயலை சிறப்பாக நடத்தி முடித்தல் சார்ந்து உரிய அறிவுரைகளை அனைத்து அரசுப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**ஆணையர்**

**இணைப்பு:**

1. உயர்தொழில் நுட்ப ஆய்வகம் (Hitech lab) மற்றும் EMIS இல் செய்யவேண்டிய முன்னேற்பாடுகள் மற்றும் பணிகள் குறித்த வழிகாட்டுதல் .
2. மதிப்பீடு நடத்துவதற்கான அட்டவணை.

**பெறுநர்**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

**நகல்:**

மாநில திட்ட இயக்குனர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

**உயர்தொழில் நுட்ப ஆய்வகம் (Hitech lab) மற்றும் EMIS இல் செய்யவேண்டிய முன்னேற்பாடுகள் மற்றும் பணிகள் குறித்த வழிகாட்டுதல் .**

1. மாணவர்கள் பள்ளியிலேயே தேர்வு எழுதுவதற்கு ஏற்ற வகையில் சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர்கள் இணையதள வசதியுடன் கணினி வளங்களை தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும்.

2. அரசு உயர்நிலை /மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள அனைத்து கணினி வளங்களையும் பயன்படுத்திப் பள்ளியில் பயிலும் மாணவர்களைத் தேவைக்கேற்ப அமரவைத்து தேர்வை நடத்த வேண்டும். அனைத்து மாணவர்களையும் இணைய வழியாக தேர்வில் பங்கேற்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

3. பள்ளியில் உள்ள கணினி/ மடிக்கணினி / TAB எண்ணிக்கைக்கு ஏற்ப மாணவ மாணவியரைத் தேர்வில் ஈடுபடுத்த வேண்டும். தேர்வு நேரம் 60 நிமிடம் முடியும் வரை தேர்வை நடத்தி முடிக்க வேண்டும்.

4. ஒரு மாணவர் தேர்வு முடித்த பின்பு தொடர்ந்து அடுத்த மாணவரை தேர்வு எழுத அனுமதிக்கலாம்.

5. காலை 9:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை தொடர்ந்து வினாத்தாள் Live ஆக இருக்கும்.

6. அனுமதிக்கப்பட்ட வினாத்தாள் ஒரு நாள் முழுவதும் Live ஆக இருப்பதால் ஒரு மாணவர் எப்போது தொடங்கினாலும் 60 நிமிடத்திற்குள் முடிக்கும் படியாக இருத்தல் வேண்டும்.

7. தேர்வு நடத்தும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு Log in செய்தல் செய்தல், Online refresh போன்ற Technical உதவி மட்டுமே செய்ய வேண்டும். வினா விடை சார்ந்து எந்த உதவியும் செய்யக்கூடாது.

8. பள்ளிகளில் உறுதி செய்யப்பட வேண்டிய கணினி வளங்கள்.

* Hi-Tech Lab.
* Computer lab.
* மேல்நிலை பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட Laptop .
* CSR activity மூலம் பெறப்பட்ட கணினிகள்
* மேல்நிலை பிரிவு மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மடிக்கணினிகள்.
* CRC, BRC களில் உள்ள System / laptop
* பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள tab.

9. இந்தத் தேர்வில் எதிர்கொள்ளும் சவால்களை EMIS Team தரும் வழிகாட்டுதல்களைப் பயன்படுத்தி உரியமுறையில் சரி செய்ய வேண்டும் அல்லது உரிய அலுவலகத்திற்கு தகவல் அனுப்ப வேண்டும்.

10. இணைய இணைப்பு (INTERNET) மின்சாரம் ஆகியன தடையில்லாமல் இருக்க தகுந்த முன்னேற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

11. மதிப்பீட்டை http://exams.tnschools.gov.in Url மூலம் நடத்த வேண்டும்.

12. அந்த இணையத்தளத்தில் உள் நுழைந்தவுடன் மாணவர்களின் EMIS ID- ஐ login ID ஆக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.இதற்கு Password மாணவர்களின் EMIS ID-ல் கடைசி நான்கு இலக்கம் @ மாணவரின் பிறந்த ஆண்டினைக் கொடுத்து உள்நுழைய வேண்டும் உதாரணமாக- ஒரு மாணவரின் EMIS ID 3390****0400018 எனில், அந்த EMIS ID தான் இந்த தேர்விற்கான LOGIN ID, அதில் இறுதியாக உள்ள 0018 உடன் "@" சேர்ந்து மாணவரின் பிறந்த ஆண்டு 2006 எனில் அந்த மாணவரின் password 0018@2006 ஆகும்.

URL : http://exams.tnschools.gov.in

LOGIN ID : 3390****0400018

PASSWORD: 0018@2006

13. Login செய்து உள் நுழைந்தவுடன் தேர்விற்கான வினாத்தாளில் ஒவ்வொரு வினாவாக திரையில் தோன்றும்.

14. மாணவரின் EMIS ID, பிறந்த தேதி இவை அனைத்தும் பள்ளி கல்வித்துறை வழங்கிய மாணவர்களின் திறன் அடையாள அட்டையில் (ID CARD) உள்ளது அதனை பயன்படுத்திக் கொள்ளலாம்.

**Refresher Course**
**Assessment School Plan**

| Date of Assessment | Class | Groups | Subject |
|---|---|---|---|
| 12.10.2021 to 13.10.2021 | XI | **Arts**<br>History,Economics,Commerce,Accountancy<br>Geography, History,Economics,Pol.science<br>Geography, History,Economics,Adv.tamil<br>Geography, History,Economics,Comp.app<br>Geography, History,Economics,E&I culture<br>Statistics,Geography, History,Economics,<br>Geography, History,Economics,comm.english | 1.History |
| 20.10.2021 to 22.10.2021 & 25.10.2021 to 26.10.2021 | XI | All Groups | English & Tamil |
| | XII | All Groups | English & Tamil |
| 26.10.2021 to 29.10.2021 | IX | | All subjects |
| | X | | |
| 02.11.2021 to 05.11.2021 | XI | **Science Group**<br>Physics, Chemistry, Biology, Mathematics<br>Physics, Chemistry, Mathematics, Comp.science | 1. Physics<br>2.Chemistry<br>3.Mathematics<br>4.Bio botany,<br>5. Bio Zoology |
| 05.11.2021 to 09.11.2021 | XI | **Science Group**<br>Physics, Chemistry,Botany,Zoology<br>Physics, Chemistry, Biology, Comp.science | 1. Physics<br>2.Chemistry<br>3.Botany,<br>4. Zoology<br>5. Biology |
| 10.11.2021 to 12.11.2021 | XII | **Science & Arts Group**<br>Economics,Commerce,Accountancy,Comp.App<br>Physics, Chemistry, Biology, Mathematics | 1. Economics<br>2. Commerce<br>3. Accountancy<br>4. Comp.App<br>5. Physics<br>6. Chemistry<br>7. Biology<br>8. Mathematics |
| 12.11.2021 & 16.11.2021 to 17.11.2021 | XII | **Science & Arts Group**<br>History,Economics,Commerce,Accountancy<br>Physics, Chemistry,Comp.Science, Mathematics | 1. History<br>2. Economics<br>3. Commerce<br>4. Accountancy<br>5. Physics<br>6. Chemistry<br>7. Comp.Science<br>8. Mathematics |
| 18.11.2021 to 19.11.2021 | XII | **Science Group**<br>Physics, Chemistry,Botany,Zoology<br>Physics, Chemistry,Biology,Comp.Science | 1. Physics<br>2. Chemistry,<br>3. Botany<br>4. Zoology<br>5. Biology<br>6 Comp.Science |